11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015 மற்றும் 2015–2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். இரண்டு அறிக்கைகளையும் நீங்களே அளித்துவிடலாம்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன்.*

2014–2015 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவினத்திற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2014–2015 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும், மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைககள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்திருக்கிறது. அவ்வாறே, 2014–2015 ஆம் ஆண்டில் 78.56 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

2014–2015 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, “பாசனம் (பொதுப் பணித் துறை)” “தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)” மற்றும் “நிதித் துறை” ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.